

# அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில்

பாபநாசம்

| | |
|---|---|
| இறைவன் | அருள்மிகு பாபநாசர் |
| இறைவி | அருள்தரும் உலகம்மை |
| தீர்த்தங்கள் | தாமிரபரணி, வேத தீர்த்தம், பழைய பாபநாச தீர்த்தம், வைரவ தீர்த்தம், வானதீர்த்தம் |
| தல விருட்சம் | கிளாமரம் |
| ஆகமம் | காமிகா ஆகமம் |
| சிறப்பு | சூரிய ஸ்தலம் |

## தல வரலாறு

தாமிரபரணி ஆற்றின் மேல்கரையில் இத்திருக்கோயில் கிழக்கு முகமாக அழகுடன் விளங்குகிறது. இத்திருக்கோயில் விக்கிரமசிங்க

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்,
அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில், பாபநாசம்,
திருநெல்வேலி - 627 422. தொலைபேசி : 04634 293757
email : papanasaswamy@rediffmail.com

பாண்டியன் காலத்தில் ஏறக்குறைய 200 அண்டுகளுக்கு முற்பட்டது என்று சான்றோர் கருதுகின்றனர். தம்மை அடைந்தாரது பாவங்களை நாசஞ் செய்தருளுவதால் பாபநாசர் என்று அழைக்கப்படுகிறார். அறிந்தும், அறியாமலும் செய்கிற பாவங்களை அகற்றவல்லது.

## புராணச் சிறப்பு

விராட்டு மகரிஷி, இறைவனை பூசை செய்து முக்தி அடைந்த திருத்தலம். விராட்டு மகரிஷி சிலகாலம் வைராசலிங்கர் (பாபநாசர்) சுவாமியை பூஜை செய்து வந்தார். சுவாமியிடம் மகரிஷி, தனக்கு மோட்சம் எப்போது கிடைக்கும் என்று வேண்டிய போது, இறைவன் விராட்டு மகரிஷியின் ஆயுட்காலத்தை தெரிவித்தார். ஒரு சதுரயுகமானது, பிரம்மாவிற்கு ஒருநாள் அப்படி முந்நூற்று அறுபத்தி ஐந்து நாட்கள் கொண்டது. அவருக்கு ஒரு வருடம் விஷ்ணுவிற்கு நூறு வயது. இவ்வாறு இரண்டு விஷ்ணுவினுடைய ஆயுட்காலமானது ருத்ரனுக்கு. ஒரு நாள், இதுபோல் முந்நூற்று அறுபத்தி ஐந்து நாள் கொண்டது. ஒரு வருடம் அவருடைய ஆயுட்காலம் நூறு. இவ்வாறு இரண்டு ருத்ரனுடைய காலம் முடியும் போது விராட்டு மகரிஷிக்கு ஒரு நாள் இப்படி, சில காலம் பூசை செய்து மோட்சம் அடைந்த தலம் என்கிற சிறப்புடையது.

க்ருத யுகமான முதல் யுகத்தில் மலையரசன் மகளாகிய பார்வதி தேவியின் திருமணமானது கையிலாய மலையில் வைத்து நடைபெற்றது. திருமணத்தைக் காண தேவர்களும், முனிவர்களும் மற்றும் ஏனையோரும் கயிலையில் ஒருங்கே கூட, பூமியின் வடபகுதி தாழ்ந்தும் தென்பகுதி உயர்ந்தும் காணப்பெற்றது. பூமியை சமன் செய்யும் பொருட்டு இறைவன் தமிழ் மாமுனிவரான அகத்திய பெருமானை தெற்கே செல்லும்படி ஆணையிட்டார். அகத்திய பெருமான் இறைவனது திருமணக்கோலம் காண கிடைக்காமையால் வருந்துவதை அறிந்த சிவபெருமான் அகத்தியரிடம், 'எனது திருமணக் கோலத்தை சித்திரை மாத பிறப்பில் உனக்கு தென் பொதிகை பாபநாசம் திருத்தலத்தில் வழங்குவோம்' என்று அருளினார். அவ்வாறு மகத்துவம் மிகுந்த அகத்திய மாமுனி பொதிகை மலையில் வந்து தங்கியதும், பூமி

சமநிலை அடைந்தது. இறைவன் தனது திருமண கோலத்தை அகத்தியரிடம் கூறியவாறே சித்திரை மாத பிறப்பன்று காட்டியருளினார். அன்று தொட்டு சித்திரை மாத பிறப்பன்று அகஸ்தியருக்கு திருமண காட்சியருளும் வைபவம் நடைபெற்று இங்கு இன்றும் நடைபெற்று வருகிறது.

## தனிச் சிறப்பு

இத்திருக்கோயிலில் இறைவன், அகத்திய மாமுனிவர் மற்றும் லோகமித்திரை ஆகியோருக்கு திருமண கோலத்தில் உமாதேவியோடு கல்யாணசுந்தரராய் காட்சி தரும் காட்சி தனி சந்நிதியாக உள்ளது. பொதிகை மலை, சைய மலை, தருத்துர மலை ஆகிய மூன்றும் இறைவனை வணங்கி வரம் பெற்ற தலம்.

இத்திருக்கோயிலில் அம்மன் சந்நிதி முன்பு, உரலில் மஞ்சளை இடித்து பெண்கள் நெற்றியில் மாங்கல்யத்தில் இட்டுக்கொள்வர். திருமணமானவர்கள் கணவரோடு நீண்ட நாள் நிலைத்து வாழவும், கன்னிப் பெண்கள் விரைவில் திருமணம் நடைபெறவும் மஞ்சள் இடித்து அம்மனை நினைத்து பூசுவது ஐதீகம்.

இத்திருக்கோயிலின் தாமிரபரணி தீர்த்தத்தில் அமாவாசை காலங்களில் புண்ணிய நீராடுவர். இதில் தை அமாவாசை மற்றும் ஆடி அமாவாசை நாட்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி புனித நீராடி இறைவனை வழிபடுவர். நவகயிலாயத்தில் முதல் தலமான சூரிய ஸ்தலம் இத்திருக்கோயில்.

## முக்கிய திருவிழாக்கள்

சித்திரை விசு, மார்கழி உற்சவம், கந்த சஷ்டி திருவிழா, சிவராத்திரி திருவிழா. இத்திருக்கோயிலில் ஆறு கால பூசை நடைபெறுகிறது.

## நடை திறப்பு

காலை 6.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
மாலை 4.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை

## அமைவிடம் மற்றும் பேருந்து வசதி

இத்திருக்கோயில், மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் பொதிகை மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. திருநெல்வேலி பேருந்து நிலையத்திலிருந்து சேரன்மகாதேவி வழியாகவும், முக்கூடல் வழியாகவும் பேருந்து வழித்தடம் உள்ளது. திருநெல்வேலி பேருந்து நிலையத்திலிருந்து எண்ணற்ற பேருந்துகள் பாபநாசத்திற்கு இயக்கப்படுகின்றன.

## அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில்



**1 வது தலம்**

**அம்சம் :** சூரியன்
**ராசி :** சிம்மம்

**சிறப்பு :** இத்தலத்து இறைவனை வழிபட்டால், கும்பகோணம் அருகே உள்ள சூரியனார் கோயில் சிவபெருமானை வழிபட்டதற்குச் சமம்.

**பலன் :** கண் நோய், தோல் சம்பந்தப்பட்ட நோய் நீங்கி உடல் ஆரோக்யம் கிட்டும்.

